செ.வெ.எண்: 31 நாள்: 10.08.2016

**புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டாரத்தில் நேரடி நெல் விதைப்பு செயல் விளக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரம், காரவயல் கிராமத்தில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நேரடி நெல் விதைப்பு கருவி இணைக்கப்பட்ட டிராக்டரை இயக்கி நெல் விதைப்பு செய்து நேரடி நெல் விதைப்பு செயல் விளக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.08.2016) துவக்கி வைத்து கூறியதாவது:

நமது மாவட்டத்தில் சம்பா பருவத்தில் நேரடி நெல் விதைப்பு மூலம் சுமார் 31,000 எக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுவதுடன், அறந்தாங்கி வட்டாரத்தில் மட்டும் சுமார் 7400 எக்டர் பரப்பளவில் நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளப்படும்.



நேரடி நெல் விதைப்பில் கூடுதல் மகசூல் பெற தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு தொகுப்பு செயல்விளக்கத் திட்டம் நமது மாவட்டத்தில் 500 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்படவுள்ளது.
அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள அறந்தாங்கி வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 150 எக்டர் பரப்பளவில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் நேரடி நெல் விதைப்பு தொகுப்பு செயல் விளக்கம் அமைக்கப்படவுள்ளது. இதில் அறந்தாங்கி வட்டாரம் காரவயல் கிராமத்தில் நேரடி நெல் விதைப்பு செயல் விளக்கம் துவக்கிவைக்கப்பட்டுள்ளது. மேலும் காரவயல் கிராமத்தில் இத்திட்டத்தின் கீழ் 33 எக்டர் பரப்பளவில் 42 விவசாயிகளுக்கு நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்ப செயல்விளக்கத் திட்டத்திற்கான இடுபொருட்களும் மானிய விலையில் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இச்செயல் விளக்கத்திற்கு தேவையான உயர் விளைச்சல் நெல் ரக விதைகள், திரவ நுண்ணுயிர் உரங்கள், நெல் நுண்ணூட்டக் கலவை ஆகிய இடுபொருட்கள் மானியத்தில் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. செயல் விளக்கத்திற்கு பயன்படுத்தப்படும் களைக்கொல்லி, பயிர் பாதுகாப்பு மருந்துகள், விதைப்பு கருவி வாடகை, துவரை ஓரப் பயிர் ஆகிய இனங்களுக்கு விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக விவசாயிகள் வங்கி கணக்கில் செலுத்தப்படுவதுடன் இச்செயல் விளக்கத்திற்கு ஒரு எக்டருக்கு ரூ.7500 மதிப்பிலான மானியமும் வழங்கப்படுகிறது. எனவே அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் அரசின் சலுகைகளை பெற்று நேரடி நெல் விதைப்பு மேற்கொண்டு அதிக மகசூலைப் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு.நா.அண்ணாமலை, வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) திரு.பெ.உதயகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.ஜி.மனோகரன், அறந்தாங்கி வேளாண்மை உதவி இயக்குநர் திரு.சக்திவேல், வேளாண்மை அலுவலர்(மத்திய திட்டம்) திரு.எஸ்.இராஜசேகரன், அறந்தாங்கி வேளாண் அலுவலர் திரு.இளஞ்செழியன் மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.